بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**பைஅத்தின் நோக்கமும் இது தான் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவத தனது கருணைமிக்க எஜமானனாகிய இறைவன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு உள்ளத்தில் மிகைத்து விட வேண்டும். நாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் முன்பு ஸலவாத் ஓதும் போது தான் அன்னார் மீதுள்ள அன்பு உள்ளத்தில் மிகைத்து நிற்க முடியும்.**

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21.08.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று ஜுமுஆவிற்குப் பிறகு ஆண்டு மாநாடு முறையாக துவங்கி விடும். இன்ஷா அல்லாஹ். அதாவது மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப முதல் அமர்வு ஆரம்பமாகி விடும். ஆனால் ஜுஆவிற்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது. இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இந்த முக்கியத்துவத்தையும் கண்முன் நிறுத்தியவாறு இதற்கான உரிமையையும் நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். எனவே, இந்த மாநாட்டின் காரணமாக இந்த உரிமையை செலுத்த வேண்டும் அல்லது இந்த உரிமையை செலுத்தும் தருணத்தில் நீங்கள் ஆண்டு மாநாடு அருளுக்குரியதாக அமைவதற்கு துஆக்களை செய்யுங்கள்.

ஜுஆவின் முக்கியத்துவம் பற்றி ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நாட்களில் சிறந்த நாள் ஜுமுஆ நாளாகும். இந்த நாளில் நீங்கள் என்மீது அதிகமாக ஸலவாத் ஓதுங்கள். ஏனென்றால் நீங்கள் ஓதுகின்ற இந்த ஸலவாத் இந்த நாளில் என்முன்னால் எடுத்து வைக்கப்படுகின்றது.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இந்த நாளில் ஒரு நேரம் வருகிறது. அப்போது ஒரு நம்பிக்கையாளர் இறைவனிடம் துஆக்கள் செய்தவாறு எந்த துஆவை வேண்டினாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிடும். மேலும் அந்த நேரம் மிகவும் சிறிதாகும் என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதுவே ஜுமுஆவின் முக்கியத்துவம் ஆகும். எனவே இன்றைய நாளில் நாம் செய்கின்ற இபாதத், குத்பா கேட்பது (ஏனென்றால் குத்பாவும் ஜுஆவின் இபாதத்தின் ஒரு பகுதியேயாகும்) போன்றவற்றிற்கு இடையில் நாம் துஆக்கள் செய்யும் போது எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான துஆ நாம் ஓதும் ஸலவாத் ஆகும். எனவே, ஸலவாத் அதிகமாக ஓதுங்கள். சிந்தித்தவாறு அதை ஓதுங்கள். நீங்கள் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் என்று கூறும் போது, அல்லாஹ்வே ! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது புகழை உயர்த்தியவாறு அவர்களது அழகான தூதுச் செய்திக்கும், போதனைக்கும் வெற்றியை வழங்கி அவர்கள் கொண்டு வந்த ஷரீத்தை உண்மையான முறையில் நிலைநாட்டியவாறு இதன் மேன்மையையும், மகத்துவத்தையும் உலகில் நிரூபித்துக் காட்டுவாயாக. இதனை பரப்புவதற்கு நாங்கள் உதவியாளராக இருப்பதற்கு எங்களுக்கு நீ நல்வாய்ப்பை வழங்கியவாறு பெருமானார் (ஸல்) அவர்களது உம்மத்திற்காக விதிக்கப்பட்ட அருட்கொடைகளிலிருந்து எங்களுக்கும் பங்கு கிடைக்க வைப்பாயாக என்ற சிந்தனையுடனும், அறிவுடனும் இந்த கருத்தை புரிந்து நாம் துஆ செய்ய வேண்டும்.

பிறகு நாம் அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் என்று கூறும் போது, அல்லாஹ்வே ! இதுவும் எங்களது துஆவாகும். நீ பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எத்தகைய கண்ணியத்தையும், மகத்துவத்தையும், பெரும் மகிமையையும் விதித்துள்ளாயோ அவற்றை நிலைநாட்டியவாறு எதிரிகளை தோல்வியடையச் செய்து இந்த காட்சியை நாங்கள் காண்பதற்கும், அந்த பணியில் நாங்களும் பங்கு பெறுவதற்குமுள்ள நல்வாய்ப்பை வழங்குவாயாக, நாங்களும் அந்த வெற்றியை காண வேண்டும் என்ற சிந்தனையுடன் இந்த துஆவை செய்ய வேண்டும்.

இறைவான ! பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக நிலைநாட்டப்படுகின்ற ஒவ்வொரு சூழ்ச்சியையும், முயற்சியையும் எதிரிகள் மீதே விழச் செய்வாயாக. நாம் இன்று ஒன்று கூடியவாறு ஒட்டுமொத்தமாக இந்த துஆவை செய்கின்ற போது இது எத்தகைய துஆவாக இருக்குமென்றால் அது அல்லாஹ்வின் அன்பு மற்றும் அதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றின் பார்வையை அது பெற்று விடும். அல்லாஹ் அவ்வாறே அந்த துஆக்களை பார்ப்பான். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் அருள்களிலிருந்து நாமும் பலன் பெறுவோம். பிறகு இதன் நீடித்திருக்கும் அருள்களிலிருந்து நாம் நமது பங்கை பெற்றுக் கொண்டே செல்வோம். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் முன்னிலையில் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களது இந்த துஆக்கள் எடுத்து வைக்கப்படும் போது அவர்கள் மீது ஓதப்பட்ட ஸலவாத் அவர்கள் முன் எடுத்து வைக்கப்படும் போது பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது துஆக்களின் அருள்களும் கூட நமக்கு கிடைக்கின்றது. இவ்வாறு அருள்களின் ஒரு தொடர் ஆரம்பமாகி விடுகின்றது. நமது மாநாட்டின் ஒரு மிகப்பெரும் நோக்கம் இதுவேயாகும். அதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். பைஅத்தின் நோக்கமும் இது தான் என்று கூறியுள்ளார்கள். அதாவத தனது கருணைமிக்க எஜமானனாகிய இறைவன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு உள்ளத்தில் மிகைத்து விட வேண்டும். நாம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் முன்பு ஸலவாத் ஓதும் போது தான்

அன்னார் மீதுள்ள அன்பு உள்ளத்தில் மிகைத்து நிற்க முடியும். ஏனென்றால் இது அல்லாஹ்வின் கட்டளையும் ஆகும்.

பிறகு உங்களது நிலைமைகளையும் அதற்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு வடிவமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதற்கான முன்மாதிரியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு முன்னால் எடுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாக அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது, அவர்களை பின்பற்றுவது ஆகியவை அல்லாஹ்வின் அன்பை நமக்கு பெற்றுத் தரக்கூடியதாக ஆகிவிடும்.

எனவே, ஜுமுஆவின் தருணத்திலும், ஜுஆவிற்குப் பிறகும் குறிப்பாகவும் மற்ற இரண்டு நாட்களிலும் ஒரு கவனத்துடன் ஸலவாத் ஓதுவதிலும் மற்றும் இறைவனை நினைவு கூர்வதிலும் ஒவ்வொருவரும் தமது நேரத்தை கழிக்க வேண்டும். அதன் காரணமாக அல்லாஹ் நம்மீது கருணை காட்டியவாறு நமது எதிரிகளின் எல்லா சூழ்ச்சிகளையும் அவர்கள் பக்கமே திருப்பிவிட வேண்டும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்மாதிரியில் அல்லாஹ்வின் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துகின்ற மகத்தான முன்மாதிரியையும் பார்க்க முடிகின்றது. இதற்காகவும் நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த நிலையை நாமும் பின்பற்றி செல்ல வேண்டும்.

பிறகு அல்லாஹ் நம்பிக்கையாளரின் ஒரு அடையாளமாக அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு, நேசம், கருணை ஆகிய உணர்வுகளை கடைபிடித்தவாறு வாழ்வை கழிப்பவராக இருப்பர் என்று கூறுகின்றான். இவ்விஷயத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி நமக்கு தெரிகின்றது. அதன் வரைபடத்தை அல்லாஹ் இவ்வாறு நமக்கு காட்டுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான். عزيز عليه ما عنتم அதாவது உங்களுக்கு ஏற்படுகின்ற துன்பம் அவருக்கு மிகுந்த வேதனையை தருகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முஃமின்கள் மீது எந்த அளவிற்கு அன்பு இருந்ததென்றால் அவர்களுக்கு சிறிதளவு துன்பம் ஏற்படுவதைகூட அன்னாரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. முஃமின்களுக்கு ஏற்படுகின்ற சிறு துன்பங்கள் கூட அவர்களை நிம்மதி இழக்க செய்திருந்தது.

ஆக, இந்த முன்மாதிரி தான் நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது உங்களில் ஒருவருக்கு ஏற்படும் துன்பம் உங்களை நிம்மதி இழக்க செய்துவிட வேண்டும். பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவர் மீது உண்மையிலேயே அன்பு மற்றும் கருணையின் உணர்வுகள் இருந்தால் தான் இந்த நிலை ஏற்பட முடியும். ஆண்டு மாநாட்டை நடத்துவதன் நோக்கங்களில் ஒரு நோக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனையும் கூறியுள்ளார்கள். அதாவது அதன் மூலமாக ஜமாஅத்திலுள்ள சகோதரத்துவ தொடர்பு உறுதியாக ஆகிவிட வேண்டும். மனிதர்கள் சுயநலமின்றி பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யும் போது தான் சகோதரத்துவ உறவு உறுதியாகும். மேலும் ஒருவர் மற்றவர்களது உணர்வுகளை கருத்தில் கொள்ளும் போது தான் சகோதரத்துவம் உறுதியாகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் விரும்பிய தர்பிய்யத்தின் அந்த உயர்வான தரம் கிடைக்காமலிருந்த மாநாடுகள் நடந்த அந்த ஆரம்ப நாட்களில் தியாகத்தின் அந்த சிறந்த உணர்வு இல்லாமல் இருந்தது. கொள்கை அடிப்படையில் வலுவான நிலை உருவாகி இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சுற்றுப்புற சூழலின் தாக்கத்தின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தில் உருவாக்க விரும்பிய இறையடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள், அன்பு, சகோதரத்துவம் ஆகியவை செயல் அளவில் உருவாகாமல் இருந்தது. மாநாட்டில் ஒருவர் மற்றவரை கருத்தில் கொள்வதில்லை என்ற புகார்களை ஹுஸூர் (அலை) அவர்கள் கேட்ட போது மேலும் ஒரு சிலர் தமது சுகத்திற்கு பிறரது சுகத்தை விட முன்னுரிமை வழங்கினர் என்பது அவர்களுக்கு தெரிய வந்த போது இந்த விஷயத்தில் அவர்கள் மிகவும் வெறுப்படைந்தார்கள். இந்த வெறுப்பின் காரணமாக பிறகு ஒரு ஆண்டு மாநாடு நடத்தப்படாமல் இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் கடுமையாக இவ்வாறு கூறினார்கள்:

உண்மையாகவே நான் உங்களுக்கு கூறிக் கொள்கின்றேன். தனது சுகத்தை விட தனது சகோதரனின் சுகத்திற்கு முடிந்த வரை முன்னுரிமை வழங்காமல் இருக்கின்ற வரை மனிதனுடைய ஈமான் ஒருபோதும் சரியாக இருக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது இந்த உள்ளத்தின் உணர்வுகளை பாருங்கள். தமது ஜமாஅத் சகோதர்களிடையே சகோதரத்துவம் மற்றும் அன்பு, நேசம் ஆகியவற்றை பார்க்க வேண்டும் என்ற உணர்வு அவர்களது உள்ளத்தில் இருந்தது. இந்த விஷயத்தால் அவர்கள் நிம்மதி இழந்து விட்டார்கள். அதாவது என்னை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் மற்றவரது துன்பம் பற்றி ஏன் உணர்வு இல்லாமல் இருக்கின்றார் ? என்ற விஷயம் அவர்களை நிம்மதி இழக்கச் செய்தது.

ஆக, எங்கு ஆண்டு மாநாட்டிற்காக வருபவர்கள் மற்றும் அதில் கலந்து கொள்பவர்கள் அதன் நோக்கமாக இருக்கின்ற அல்லாஹ் மற்றும் தூதர் மீதுள்ள அன்பை உருவாக்க வேண்டுமோ அங்கு அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையில் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வுகளையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். தனது மார்க்க அறிவையும் அதிகரிக்கும்படி செய்ய வேண்டும்.

அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் உருவாக வேண்டிய அந்த நிலையைப் பற்றி மேலும் ஆண்டு மாநாட்டின் நோக்கமாக இருக்கும் இவ்விஷயத்தைப் பற்றி இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்கள்:

முடிந்த வரை எல்லா நண்பர்களும் இறைவனின் விஷயங்களைக் கேட்பதற்கும், துஆவில் பங்கு பெறுவதற்கும் இந்த தேதிகளில் இங்கு வர வேண்டும். இந்த மாநாட்டில் உண்மைகள் மற்றும் இறைஞானங்கள் நிரைந்த விஷயங்களை கேட்கின்ற பணி இருக்கும். அது ஈமான், நிச்சய உறுதி மற்றும் இறைஞானத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவற்கு அவசியமானதாகும். மேலும் அந்த நண்பர்களுக்காக குறிப்பான துஆவும், குறிப்பான கவனமும் செய்யப்படும். இறைவன் அவர்களை தன் பக்கம் ஈர்க்க வேண்டும் என்பதற்காக முடிந்தவரை அதாவது அல்லாஹ் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு தூய மாற்றத்தை வழங்க வேண்டும் என்று எல்லா கருணையாளர்களை விட கருணைமிக்க இறைவனின் சன்னிதியில் முயற்சி

செய்யப்படும். இந்த மாநாட்டின் தற்காலிய பயணாக இதுவும் இருக்கின்றது. ஒவ்வொரு புதிய வருடத்திலும் இந்த ஜமாஅத்தில் இணைகின்ற புதிய சகோதரர் குறிப்பிட்ட தேதிகளில் இங்கு வந்து தமக்கு முன்னால் இருந்த தமது சகோதரர்களின் முகத்தை கண்டு கொள்வர். ஒருவர் மற்றவரை அறிந்து அறிமுகமாகிக் கொள்வதன் மூலம் பரஸ்பரம் அவர்களுக்கிடையில் அன்பு மற்றும் அறிமுகத்தின் தொடர்பு முன்னேற்றமடையும். எல்லா சகோதரர்களையும் ஆன்மீகமான முறையில் ஒன்றாக ஆக்குவதற்கும், அவர்களுக்கிடையேயுள்ள வரட்டுத்தன்மை, ஒருவர் மற்றவரை அன்னியராக கருதுவது மற்றும் நயவஞ்சகம் ஆகியவற்றை இடையிலிருந்து அகற்றுவதற்காக கண்ணியமிக்க இறைவனின் முன்னிலையில் முயற்சி செய்யப்படும். இந்த ஆன்மீக மாநாட்டில் இன்னும் பல ஆன்மீக பலன்களும், லாபங்களும் இருக்கும். அவை அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹுத் தஆலா அஸீஸ்.

எனவே, நம்மில் ஒவ்வொருவரும் இந்த விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். நாம் இந்த நாட்களில் இங்கு மாநாட்டின் நோக்கங்களை நிறைவு செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிரிதோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று இந்த மாநாட்டை உலக திருவிழாக்களில் ஒரு திருவிழா போன்று கருதிவிடக்கூடாது. இந்த மேற்கோளில் தெரிய வருவது போன்றே இந்த நாட்களில் நமது கவனம் இறைவன் கூறுகின்ற விஷயங்களை கேட்பதன் பக்கம் இருக்க வேண்டும். பரஸ்பரம் தங்களுக்கிடையில் சபைகளைக் கூட்டுவது, அரட்டையடிப்பது போன்றவற்றால் நேரத்தை கழிக்கக் கூடாது. அவ்வாறே தமது பெரும்பாலான நேரங்களை கடை வீதிகளில் திரிந்தவாறும் கழிக்கக் கூடாது. எனவே, மாநாட்டில் கலந்து கொள்வது போது மீதியுள்ள நேரங்களை மார்க்க விஷயங்களை கேட்பதிலும், இறைவனை நினைவு கூர்வதிலும் கழியுங்கள். அல்லது மற்ற நிகழ்ச்சிகளை பாருங்கள். கடை வீதிகளிலும், இங்கும் அங்கும் திரிவதற்குப் பகரமாக ஜமாஅத் அளவில் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உதாரணமாக, மக்ஸனே தஸாவீர் அதாவது புகைப்படங்களின் ஒரு கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற விஷயங்களைப் பார்க்கும் போது ஈமானிலும், நிச்சய உறுதியிலும் மனிதனுக்கு அதிகரிப்பு ஏற்படுகின்றது. இந்த கண்காட்சியில் ஜமாஅத்தின் வரலாறு கூறப்பட்டிருக்கின்றது. அதைப் பாருங்கள். எவ்வாறு அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள விஷயங்களை நிறைவேற்றுகின்றான். எவ்வாறு அவர்களிடம் தான் செய்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றான் என்பதைப் பார்த்து அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூருங்கள். மேலும் ஜமாஅத்தின் அறிமுகமும், பிரச்சாரமும் உலகின் எல்லைகள் வரை எவ்வாறு பரவியுள்ளது என்பதைப் பாருங்கள். பிறகு அங்கு அஹ்மதிய்யத்திற்காக ஷஹீதானவர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதை பார்த்து அவர்களது பதவிகள் உயர்த்தப்படுவதற்கும், உங்களது ஈமானின் வலிமைக்கும், அந்த ஷஹீதுகளின் குடும்பங்களுக்காகவும், ஜமாஅத் சகோதரர்களுக்காகவும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு இடத்திலும் எதிரிகளின் தீங்கிலிருந்து ஜமாஅத்தை பாதுகாப்பாக வைப்பானாக.

பிறகு வெளியீட்டுத் துறையிள் ஒரு ஸ்டால் வைக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஒரு கூடாரமும் இருக்கின்றது. அங்கு சென்று இந்த வருடம் வெளியிடப்பட வெளியிடப்பட்ட நூல்களையும், பிரசுரங்களையும் பாருங்கள். அவற்றில் எதை வாங்க முடியுமோ அதை வாங்குங்கள். இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிரசுரங்கள் எவரிடம் இல்லையோ அவர்கள் அதை பெற்றுக் கொள்ள முயற்சி செய்யுங்கள். Review of Religion ம் தனது ஸ்டாலை அதாவது அதற்குரிய இடத்தை அவர்கள் விரிவாக்கியுள்ளனர். இந்த முறை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கஃபன் செய்யப்பட்ட துணி தொடர்பாக அங்கு பல தகவல்களும் உங்களுக்கு கிடைக்கும். அதையும் பாருங்கள். இந்த விஷயங்களைப் பார்க்கின்ற போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உண்மை மேலும் வெளிப்படுகிறது. அதைப் பார்த்து உங்கள் ஈமானை அதிகரிக்கும்படி செய்யுங்கள். இவ்வாறே மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகளைத் தவிர வேறு பல்வேறு மொழிகளிலும் நிகழ்ச்சிகள் உள்ளன. அதிலிருந்தும் பலன் பெற விரும்புபவர்கள் பலன் பெற வேண்டும். மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பரஸ்பரம் உங்களிடையே அறிமுகம் ஏற்படுவதற்காக உங்களில் ஒருவர் மற்றவரை சந்தியுங்கள். ஆண்டு மாநாட்டிற்கு பிறகு புதிதாக வந்துள்ள பல அஹ்மதிகளும் எங்களது மொழிகள் பலவாக இருந்தும் நாங்கள் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த அஹ்மதிகளை சந்திக்கும் போது சைகையின் மொழியின் மூலமாகவே அன்பு மற்றும் நேசத்தின் எத்தகைய உணர்வுகள் உருவாகின்றனவென்றால் மேலும் அவை எவ்வாறு வளர்ச்சி அடைகின்றது என்றால் அவற்றை சொற்களால் விளக்கிக் கூற முடியாது என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவர்களுக்கிடையில் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் தொடர்பு வளர்ச்சி அடைய வேண்டும். ஆன்மீகமான முறையில் எல்லா சகோதரர்களும் ஒன்றாகிவிட வேண்டும். மேலும் அவர்களுக்கிடையே வரட்டுத்தன்மை, ஒருவரை அன்னியராக கருதுவது, நயவஞ்சகம் ஆகியவற்றை அகற்ற முயற்சி செய்ய வேண்டும். அதற்காக துஆவும் செய்ய வேண்டும் என்று கூறியிருந்ததைப் போன்றே மாநாட்டில் எவ்வித சுய நோக்கமுமின்றி ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்வது, துஆக்கள் செய்வது ஆகியவை எத்தகைய சுற்றுச் சூழலை ஏற்படுத்தி விடுகிறது என்றால் அவை நமது மாநாடுகளில் மட்டும் தான் தென்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் இந்த தொடர்பையும், அறிமுகத்தையும் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதை வளர்ச்சியடைய செய்ய வேண்டும்.

அன்னார் தம்மை அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இவ்வாறு போதனை செய்தார்கள்:

நீங்கள் இப்படிப்பட்ட சபைகளில் வந்து செல்பவர்களைப் போன்று ஆகிவிடக்கூடாது. மாறாக, கலப்பற்ற மனத்தூய்மையை உருவாக்குங்கள். நம்மில் ஒவ்வொருவருக்கும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. அதாவது கலப்பற்ற மனத்தூய்மையுடன் இந்த எல்லா நிகழ்ச்சிகளையும் கேட்க வேண்டும். அது அல்லாமல் நீங்கள் இவ்வளவு செலவு செய்து இங்கு வந்திருப்பதும் ஜமாஅத் இந்த விரிவான ஏற்பாட்டிற்காக அதிகமாக செலவு செய்திருப்பதும் பலனற்றதாக ஆகிவிடுகின்றது.

எனவே, வந்திருக்கும் விருந்தினரும், மாநாட்டில் கலந்து கொள்பவர்களும் அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான குறிக்கோளை கண்முன் நிறுத்த வேண்டும். அதிகமதிகமாக மாநாட்டிலிருந்து அருள்களை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. மேலும் அமைப்பு ரீதியாகவும் சில விஷயங்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். மாநாட்டு அமைப்பாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குங்கள். இந்த அமைப்பு எங்கு உங்களுக்கு தொண்டு செய்வதற்காக இருக்கின்றதோ அங்கு அது உங்களது பலனுக்காகவும் இருக்கின்றது. ஒத்துழைப்பு இருந்தால் தான் ஏற்பாடுகள் சரியாக இருக்க முடியும். அது மாநாட்டு திடலில் அமர்வது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலாக இருந்தாலும் சரி. ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளை வைத்துள்ள தாய்மார்களுக்கும் வழங்கப்பட்ட வழிகாட்டலாக இருந்தாலும் சரி. அல்லது உணவு நேரம் வரும் போது உணவு வைக்கப்பட்டிருக்கும் கூடாரத்திற்கு செல்வது, ஒழுங்குமுறையை பேணியவாறு உணவு உண்பது ஆகியவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலாக இருந்தாலும் சரி. அவற்றிற்கு ஏற்ப செயல்படுங்கள். ஆனால், உணவு வழங்கக்கூடிய அமைப்பில் உள்ளவர்களும் இந்த விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். சிலருக்கு அவர்கள் நோயாளியாக இருப்பதன் காரணமாகவும், வேறு சில தவிர்க்க முடியாத காரணத்தாலும் சில நேரங்களில் அவர்கள் தாமதமாக வந்தால் அல்லது குழந்தைகளை வைத்துள்ள தாய்மார்களுக்கு உணவு வழங்கப்படும் நேரத்தை தவிர மற்ற நேரங்களிலும் ஏதாவது தேவை அவர்களுக்கு ஏற்பட்டால் அதற்கென்று ஏதாவதொரு ஏற்பாடு அங்கு எல்லா சமயமும் இருக்க வேண்டும். ஏனென்றால், கடை வீதிகளிலுள்ள கடைகளும் அப்போது அடைக்கப்பட்டிருக்கும்.

எனவே, பொதுவாக மாநாடு நடைபெறுகின்ற சமயங்களில் மாநாட்டிலிருந்து எல்லா சமயமும் பயன்பெற வேண்டும் என்பதை விருந்தினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லது சிறிதளவு அனுமதி கிடைத்து விட்டாலும் அதை வைத்துக் கொண்டு மாநாட்டிற்கான ஏற்பாட்டை செய்தவர்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடாது. குழந்தையை வைத்துள்ள தாய்மார்கள் தங்களது குழந்தைகள் சாப்பிடுவதற்காக எதையாவது கொண்டு வர வேண்டும் என்பதை பொதுவாக கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த உணவை அவர்களுக்கு ஊட்டும் போது தனியாக சென்று அதை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். அதற்கென்று தனிக்கூடாரமும் இருக்கின்றது.

போக்குவரத்தை ஒழுங்கு செய்ய நியமிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்குங்கள். அங்கும் மாநாட்டு திடலில் நுழைவதற்கு முன்பு மாநாட்டு அமைப்பாளர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பை நல்குங்கள். இவ்வாறே பாதுகாப்பு தொடர்பான பொதுவான ஏற்பாட்டை செய்திருப்பவர்களுக்கும் முழுமையாக ஒத்துழைப்பு தாருங்கள். நீங்களும் உங்களது வலப்புறத்திலும், இடப்புறத்திலும் உங்களது பார்வையை செலுத்தி வாருங்கள். இதுவும் அஹ்மதிகளின் முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு ஏற்பாடாகும். உலகின் நிலையும் அவ்வாறு இருக்கின்றது. ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் காரணமாக பொறாமை காரர்களின் தீங்கு விளைவிக்கும் நோக்கத்திலும் வேகம் காணப்படுகின்றது. அது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்துவது மிக அவசியமாகும். எல்லாவற்றையும் விட அதிகமாக நான் ஏற்கனவே கூறியதற்கேற்ப பொறாமைகாரர்களின் பொறாமையிலிருந்தும் தீங்கு விளைவிப்பவர்களின் தீங்கிலிருந்தும் தப்பிப்பதற்காக அதிகமாக இந்த நாட்களில் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக. மாநாட்டு நிகழ்ச்சிகளும் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ளது. அதில் மற்ற வழிகாட்டல்களும் எழுதப்பட்டுள்ளது. அதை கவனமாக படித்து அதற்கேற்ப செயல்படுங்கள்.

தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இரு ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். முதலாவதாக, மதிப்பிற்குரிய கரீமுல்லாஹ் சாஹிப் அவர்களது மகனான ஷஹீத் இக்ராமுல்லாஹ் சாஹிபுடையதாகும். இவர்கள் டேரா காஸி கான் மாவட்டத்தைச் சார்ந்த டோன்சா ஷரீஃபை சார்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களை எதிரிகள் 19 ஆகஸ்ட் 2015 அன்று மக்ரிப் தொழுகைக்குப் பின் இவர்கள் இருந்த மெடிக்கல் ஸ்டோருக்கு வந்து ஃபைரிங் செய்து ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய பேராசிரியர் சவுத்ரி முஹம்மது அலி M.A உடையதாகும். இவர்கள் தஹ்ரீகே ஜதீதில் வகீலுத் தஸ்னீஃபாக இருந்து வந்தார்கள். 14 ஆகஸ்ட் 2015 ல் இவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். கல்விச் சான்றிதழ் அடிப்படையில் இவரது பிறப்பு நிகழ்ந்தது 11 டிசம்பர் 1917 ஆகும். ஹுஸூர் அவர்கள் இவரது நீண்ட கால தொண்டுகளை நினைவு கூர்ந்தவாறு இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ் இவர்களது பதவிகளை உயர்த்துவானாக. இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களது பாவங்களை மன்னிப்பானாக. இவர்களைப் போன்ற தூய உள்ளம் கொண்ட அர்ப்பணிக்கும் மனப்பாங்கு கொண்ட கிலாஃபத்திற்காக தன்னை அர்ப்பணிக்கின்ற நபர்களை எப்போதும் அவன் தந்து கொண்டே இருப்பானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 21.08.2015
Tamil Translation : Moulavi. M. Rafique Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516